தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆவணி 16, திருவள்ளுவர் ஆண்டு—2052

2021 செப்டம்பர் 1, புதன்கிழமை

சென்னை–600 002, வாலாஜா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், கலைவாணர் அரங்கம், மூன்றாவது தளத்தில் உள்ள பல்வகை கூட்டரங்கத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி."

பட்டினி எனச் சொல்லி வந்தவரின் பசியைத் தீர்ப்பது வீண் போகாது. அதுவே, தான் தேடிய பொருளைப் பிற்காலத்தில் உதவுவதற்கு ஏற்பச் சேமித்து வைக்கக்கூடிய கருவூலமாகும்.

1. இரங்கற் குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் திரு. இரா. மணிமாறன், திரு. ச.க. வெங்கடேசன் ஆகியோர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரங்கற் குறிப்புகள். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. இரா. மணிமாறன் அவர்கள் 27–7–2021 அன்றும் மற்றும் திரு. ச.க. வெங்கடேசன் அவர்கள் 29–8–2021 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. இரா. மணிமாறன் அவர்கள், 1996–2001 ஆம் ஆண்டுகளில் திண்டுக்கல் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள். திரு. ச.க. வெங்கடேசன் அவர்கள், 1996–2001 ஆம் ஆண்டுகளில் மதுராந்தகம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்லமுறையில் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

6—

மாவட்ட இதரச் சாலை

***313—திரு. ம. சிந்தனை செல்வன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், சேத்தியாதோப்பிலிருந்து காட்டுமன்னார்கோவில் வழியாக மயிலாடுதுறை செல்லும் மாவட்ட இதரச் சாலையை மாநில நெடுஞ்சாலையாக மேம்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், சேத்தியாதோப்பு முதல் காட்டுமன்னார்கோவில் வழியாக மயிலாடுதுறை செல்லும் ODR சாலையை மாநில நெடுஞ்சாலையாக மேம்படுத்தும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.*